**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

# வரலாறு

| சுட்டெண் :- ........................................ | **தரம் : - 9** | **நேரம் :- 2. 00 மணித்தியாலம்** |
|---|---|---|

## பகுதி – I

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

(01) 1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பிய நாட்டவர்
(1) பிரித்தானியர் (2) ஒல்லாந்தர்
(3) போர்த்துக்கேயர் (4) பிரான்சியர்

(02) 1797 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக பிரித்தானியரால் அனுப்பப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர்
(1) டி. கமரன் (2) மெயிட்லண்ட்
(3) ஜோன்டொயிலி (4) டி. மியூரன்

(03) இலங்கையில் சட்டம், நீதி ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஜூரிசபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிமுகப்படுத்திய ஆளுநர்
(1) எட்வெட்பாண்ஸ் (2) றொபேட் பிறவுண்றிக்
(3) தோமஸ் மெயிட்லண்ட் (4) பிரட்றிக்நோர்த்

(04) கண்டி தலதாமாளிகைக்கு மனங்கவரும் பாத்திருப்பு (பத்திருப்பு) மண்டபத்தை கட்டியெழுப்பிய மன்னன்
(1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
(3) ராஜாதி ராஜசிங்கன் (4) ஸ்ரீ விஜய ராஜசிங்கன்

(05) இலங்கையின் சட்டசபைக்கு முதன்முதலாகத் தெரிவு செய்யப்பட்ட சிங்களவர்
(1) ஜொஹன்னல் கொட்பிரி பிலிப்ஸ் விஜயகோன் பண்டிதரத்னா
(2) ஜொஹன்ஸ் பிலிப்ஸ் விஜயகோன் சேனாரட்ண
(3) வாரியபொல கொட்பிரி பிலிப்ஸ் சுமங்கல விஜயகோன் பண்டித ரத்னா
(4) ஜொஹன்ஸ் பிலிப்ஸ் பானபொக்கை பண்டிதரத்னா

(06) சட்டவாக்கக்கழகத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக முதன் முறையாக வாக்குரிமை பயன்படுத்தப்பட்ட யாப்பு சீர்திருத்தம்
(1) மனிங் டெவன்ஷயர் சீர்திருத்தம் (2) மனிங் அரசியல் சீர்திருத்தம்
(3) குறூ – மக்கலம் சீர்திருத்தம் (4) டொனமூர் அரசியல் சீர்திருத்தம்

(07) பிரித்தானியக் குடியேற்றங்களில் "நிர்வாகக்குழு ஆட்சிமுறைமை" முதலில் செயற்படுத்தப்பட்ட நாடு
(1) இந்தியா (2) அவுஸ்ரேலியா
(3) நியூஸ்லாந்து (4) இலங்கை



kalvi.lk

(08) டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிர்வாக குழுவில் சீ.டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா தலைவராக பதவி வகித்த துறை

(1) சுகாதாரத்துறை (2) கல்வித்துறை
(3) போக்குவரத்து, பொது வேலைகள் (4) விவசாயத்துறை

(09) பஞ்சமகா விவாதங்களினால் கவரப்பட்டு இலங்கை வந்த ஹெலனா பல்வெட்ஸ்கி அம்மையாரின் தாய்நாடு

(1) ரஷ்யா (2) அமெரிக்கா
(3) இந்தியா (4) சீனா

(10) இன்று உலக பௌத்தர்களின் கொடியாக விளங்கும் பௌத்த கொடியை வடிவமைத்தவர்

(1) மீகெட்டுவத்த குணானந்ததேரர் (2) ஹெலனாபல வெட்ஸ்கி அம்மையார்
(3) ஹென்றி ஸ்பீல் ஒல்கொட் (4) அநகாரிக தர்மபால

(11) 1946 இல் D.S சேனநாயக்க அவர்களால் உருவாக்கப்பட்ட கட்சி

(1) லங்காசமசமாஜக்கட்சி (2) ஐக்கிய தேசியக்கட்சி
(3) கெமியூனிஸ்ட்கட்சி (4) போல்சவிக் லெனினிசக்கட்சி

(12) பிரித்தானிய ஆளுநர்கள் 'அ' பகுதியிலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 'ஆ' பகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றினைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (1) ஸ்ரூவர்ட் மெக்கன்ஸி | (A) கண்டி கைப்பற்றப்படல் |
| (2) ரொபட் சர்மஸின் | (B) இராஜகாரிய முறையை ஒழித்தல் |
| (3) பிரெட்ரித்நோர்த் | (C) தரிசுநிலச்சட்டம் |
| (4) ரொபட் பிரவுண்றிக் | (D) மார்ஷல் லோ யுத்தகாலச் சட்டம் |

(1) CADB (2) DCBA (3) DBCA (4) CDBA

(13) 20 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் பேரரசாக விளங்கிய நாடுகள் 'அ' பகுதியிலும் அவற்றின் ஆளுகைப் பிரதேசங்கள் 'ஆ' பகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றினைத் தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (1) பிரித்தானியா | (A) இந்தோனேசியா |
| (2) பிரான்ஸ் | (B) அங்கோலா |
| (3) போர்த்துக்கல் | (C) அல்ஜீரியா |
| (4) ஒல்லாந்து | (D) பர்மா |

(1) ABCD (2) CDBA (3) DCBA (4) DBCA

(14) உலகின் முதலாவது பெண் பிரதமர்

(1) திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (2) திருமதி. இந்திராகாந்தி
(3) திருமதி. பிரதீபா பட்டேல் (4) திருமதி. மாக்கிரேட் தைச்சர்



kalvi.lk

(15) 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பினை உருவாக்குவதில் முன்னணியில் நின்று செயற்பட்ட தலைவர்

(1) திரு. என். எம். பெரேரா (2) திரு. கொல்வின். ஆ. டி. சில்வா

(3) திரு. பிலிப் குணவர்த்தன (4) சேர் ஜோன் கொத்தலாவல

(16) இலங்கையில் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின் படி நிறைவேற்று அதிகாரம் உடைய முதலாவது ஜனாதிபதி

(1) R. பிரேமதாஸ (2) சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க

(3) J.R. ஜேயவர்த்தனா (4) D.P.விஜயதுங்க

(17) 15 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பேரரசுகளை உருவாக்கும் நோக்கத்தில் இறுதியாக இணைந்து கொண்ட ஐரோப்பிய நாடுகள் முறையே

(1) பிரான்ஸ், பிரித்தானியா (2) போர்த்துக்கல், ஸ்பானியா

(3) பிரித்தானியா, ஒல்லாந்து (4) ஜேர்மனி, இத்தாலி

(18) பால்டிக்கடலையும், வடகடலையும் இணைக்கும் கால்வாய்

(1) சுயெஸ்கால்வாய் (2) கீல்கால்வாய்

(3) பனாமாக்கால்வாய் (4) ஆங்கிலக்கால்வாய்

(19) முதலாம் உலகயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்கா ஈடுபடக் காரணமான ஜேர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்

(1) லூசிதானியா (2) R.M.S டைடானிக்

(3) U.S.S. அரிசோனா (4) R.M.S. குயின்மேரி

(20) அபிசீனியாவை ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடு

(1) பிரான்ஸ் (2) போரத்துக்கல் (3) இத்தாலி (4) ஒல்லாந்து

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(1)** (i) தொடக்கம் (vi) வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான இடங்கள் இலங்கைப் படத்தில் A - F வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அக்கூற்றுக்களுக்குப் பொருத்தமான எழுத்துக்களையும் அவ் எழுத்து குறிக்கும் இடங்களின் பெயர்களையும் தருக.

(i) வடகீழ் பருவக்காற்றுக் காலங்களில் அதிகளவான கப்பல்களை நிறுத்தி வைக்ககூடிய இலங்கையின் இயற்கைத் துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்



kalvi.lk


(ii) கோல்புறூக் சீர்திருத்தத்தின்படி வடக்கு மாகாணத்தின் நிர்வாக மையத்தைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்

(iii) 2ம் உலக யுத்த காலத்தில் யப்பானால் குண்டு வீசித் தாக்கப்பட்ட இலங்கையின் மேற்கே அமைந்துள்ள நகரமும் அதனைக் குறிக்கும் எழுத்தும்

(iv) *1803* இல் ஆளுநர் பிரட்ரிக்நோர்த் ஆக்கிரமித்த நகரமும் அதனைக் குறிக்கும் எழுத்தும்

(v) பங்சமகா விவாதங்களில் மிகவும் பிரபலமான விவாதம் நடைபெற்ற இடமும் அதனைக் குறிக்கும் எழுத்தும்

(vi) *1795* இல் பிரித்தானியர் கைப்பற்றிய வடமேற்கே அமைந்துள்ள துறைமுக நகரமும் அதனைக் குறிக்கும் எழுதும்




(6 x 2 = 12 புள்ளிகள்)



kalvi.lk

**(2)** (i) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் கீழே தரப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற பிரித்தானியருடைய ஆட்சிக்கு வழங்கப்பட்ட பெயர்களைத் தருக.

(a) *1798 - 1798* -

(b) *1798 – 1802* -

(c) *1802* -

*(3 புள்ளி)*

(ii) பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள் நான்கு தருக.

*(4 புள்ளி)*

(iii) *1848* ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

**(3)** (i) பாராளுமன்றத்தின் கடமைகளும், பொறுப்புக்களும் மூன்று தருக.

*(3 புள்ளி)*

(ii) கோல்புறூக்கமரனால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தத்தின்படி இலங்கையின் ஐந்து மாகாணப் பிரிவுகளில் இரண்டு மாகாணப் பிரிவுகளையும், அவற்றின் நிர்வாக மையங்களையும் தருக.

*(4 புள்ளி)*

(iii) டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

Education கல்வி අධ්‍යාපන

**(4)** (i) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளி)*

(ii) பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நான்கு தருக.

*(4 புள்ளி)*

(iii) இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

**(5)** (i) *1947* ஆம் ஆண்டு பிரித்தானியர் D.S சேனநாயக்க அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கூன்றினையும் குறிப்பிடுக.

*(3 புள்ளி)*

(ii) *1972* ஆம் ஆண்டு யாப்பின் பிரதான அம்சங்கள் நான்கு தருக.

*(4 புள்ளி)*

(iii) நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.



kalvi.lk

*(5 புள்ளி)*

**(6)** (i) *20 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்ட மூன்று ஆசிய நாடுகளின் பெயர்களைத் தருக.*

*(3 புள்ளி)*

(ii) *ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளை கைப்பற்றுவதற்கான காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக.*

*(4 புள்ளி)*

(iii) *1 ஆம் உலகமகா யுத்தத்தின் இறுதியில் சமாதான முயற்சிக்காக உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.*

*(5 புள்ளி)*

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457